அரசு தலைமை மருத்துவமனை இருக்கிறது. அந்த மருத்துவமனையில் G+5 என்று சொல்லக்கூடிய ஆறு அடுக்குக் கட்டடத்தைக் கட்டித் தரவேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. அதனை மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தரவேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல, மணப்பாறை நகரத்திற்குள் வர முடியாத அளவிற்கு அதிக போக்குவரத்து நெரிசல்கள் இருக்கின்றன. எனவே, அங்கே புறவழிச் சாலை அமைத்துத் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொண்டு, நன்றி கூறி, உரையை நிறைவு செய்கிறேன். நன்றி.

பிற்பகல் 1–25

3. அறிவிப்பு

பேரவை அலுவலில் மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று அலுவல் ஆய்வுக் குழு கூடி எடுக்கப்பட்ட முடிவிற்கேற்ப, சட்டமன்றப் பேரவை அலுவல்களை உள்ளடக்கும் நிகழ்ச்சி நிரல்.

18-8-2021 (புதன்கிழமை)	:	2021-2022 ஆம் ஆண்டுக்கான திருத்திய நிதிநிலை அறிக்கை மற்றும் 2021-2022 ஆம் ஆண்டுக்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கை ஆகியவற்றின்மீது பொது விவாதம்-மூன்றாம் நாள்
19-8-2021 (வியாழக்கிழமை)	:	2021-2022 ஆம் ஆண்டுக்கான திருத்திய நிதிநிலை அறிக்கை மற்றும் 2021-2022 ஆம் ஆண்டுக்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கை ஆகியவற்றின்மீது பொது விவாதம் (நான்காம் நாள்) மற்றும் பதிலுரை
20-8-2021 (வெள்ளிக்கிழமை)	:	மொகரம்-அரசு விடுமுறை
21-8-2021 (சனிக்கிழமை)	:	அரசு விடுமுறை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

22-8-2021 (ஞாயிற்றுக்கிழமை)	:	அரசு விடுமுறை மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும்
23-8-2021 (திங்கட்கிழமை)	:	40-நீர்வளத் துறை
24-8-2021(செவ்வாய்க்கிழமை)	:	34-நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை 42-ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
25-8-2021 (புதன்கிழமை)	:	12-கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) 13-உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)
26-8-2021 (வியாழக்கிழமை)	:	20-உயர் கல்வித் துறை 43-பள்ளிக் கல்வித் துறை
27-8-2021 (வெள்ளிக்கிழமை)	:	21-நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை 39-கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)
28-8-2021 (சனிக்கிழமை)	:	5-வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை
	:	6-கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம், மீன் வளம் மற்றும் மீனவர் நலத் துறை) 7-மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால் வளம், மீன் வளம் மற்றும் மீனவர் நலத் துறை) 8-பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை)

29-8-2021 (ஞாயிற்றுக்கிழமை)	:	அரசு விடுமுறை
30-8-2021 (திங்கட்கிழமை)	:	கிருஷ்ண ஜெயந்தி-அரசு விடுமுறை
31-8-2021 (செவ்வாய்க்கிழமை)	:	41-வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை
		51-இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு
		27-தொழில் துறை
		46-தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)
1-9-2021 (புதன்கிழமை)	:	52-மாற்றுத் திறனாளிகள் நலத் துறை
		26-வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை
		45-சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை
2-9-2021 (வியாழக்கிழமை)	:	44-குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை
		19-மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை
3-9-2021 (வெள்ளிக்கிழமை)	:	54-வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை)
		15-சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை)
		49-இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை
4-9-2021 (சனிக்கிழமை)	:	47-இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)

32-தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை

29-சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)

5-9-2021 (ஞாயிற்றுக்கிழமை) : அரசு விடுமுறை

6-9-2021 (திங்கட்கிழமை) : *28-செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)*

30-எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

17-கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)

18-கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)

10-வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

11-முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

7-9-2021 (செவ்வாய்க்கிழமை) : *3-நீதி நிருவாகம்*

24-சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

33-சட்டத் துறை

14-எரிசக்தித் துறை

		37-மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)
8-9-2021 (புதன்கிழமை)	:	9-பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை
		4-ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை
9-9-2021 (வியாழக்கிழமை)	:	25-இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)
		48-போக்குவரத்துத் துறை
		31-தகவல் தொழில்நுட்பவியல் துறை
10-9-2021 (வெள்ளிக்கிழமை)	:	விநாயகர் சதுர்த்தி-அரசு விடுமுறை
11-9-2021 (சனிக்கிழமை)	:	22-காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)
		23-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)
12-9-2021 (ஞாயிற்றுக்கிழமை)	:	அரசு விடுமுறை
13-9-2021 (திங்கட்கிழமை)	:	36-திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை
		38-பொதுத் துறை
		53-சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[பேரவைத் தலைவர்] [2021 ஆகஸ்ட் 17

1-மாநிலச் சட்டமன்றம்

2-ஆளுநர் மற்றும் அமைச்சரவை

16-நிதித் துறை

35-மனித வள மேலாண்மைத் துறை

50-ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

அரசினர் சட்டமுன்வடிவுகள்- ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும்

ஏனைய அரசினர் அலுவல்கள்

பிற்பகல் 1–30

2. திருத்திய வரவு–செலவுத் திட்டம் மற்றும் வேளாண்மை நிதிநிலை அறிக்கை, 2021–2022, பொது விவாதம்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. சம்பத்குமார் அவர்களைப் பேச அழைக்கிறேன். (குறுக்கீடுகள்) உங்கள் உறுப்பினரைத்தான் பேச அழைத்திருக்கிறேன். ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர், முன்னாள் அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்களுக்குப் பதில் சொல்லியாகிவிட்டது. அதனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. சம்பத்குமார் அவர்கள், பேசுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைக்கு ஒரு சிறிய விளக்கம். மானியக் கோரிக்கையில் பேச அனுமதித்தல். "யார் மானியக் கோரிக்கையில் பேசினார்களோ, பேசியவர்கள் அனுமதி கேட்டால் அனுமதி வழங்கப்படும். மானியக் கோரிக்கையின்மீது பேசும் உறுப்பினர்கள் யாராவது கேள்வி கேட்க வாய்ப்பு கோரினால் அவர்களை*